கைத்தொழில, வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றல், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு.

# சிறந்த உற்பத்தி பரிச்சயம் (GMP) பற்றிய சான்றிதழுக்கு அரசாங்க சலுகை

கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றல், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சினால் உள்ளூர் கைத்தொழில்களில் விளைபயனை உயர்வடையச் செய்தல் மற்றும் உணவு பாதுகாப்பை விருத்தி செய்வதற்கு விசேட அனுசரணை பெற்றுக் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டமொன்னை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2019 ஜனவரி 01 ஆம் திகதிக்கு வருடாந்த புரள்வு ரூபா 250 மில்லியன்களுக்கு குறைந்த மற்றும் ஊழியர் எணிக்கை 50 க்கு குறைந்த கீழ்க்காணும் சிறிய கைத்தொழில் துறைகளுக்கு (GMP) தரச் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பிக்க முடியும்.

- உணவு மற்றும் பான வகைகள்
- இனிப்பு பண்டங்கள் மற்றும் பேக்கரி உற்பத்திகள்
- பால் சார்ந்த உற்பத்திகள்.
- வாசனைப் பொருட்கள் உற்பத்தி
- தயாரிக்கப்பட்ட இறைச்சி மற்றும் மீன் உற்பத்தி
- தேங்காய் சார்ந்த உற்பத்தி.

**பயன்கள்.**

- தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில்களுக்காக உச்ச ரூபா 100,000.00 வரை சான்றிதழ கட்டணம் செலுத்தப்படும் என்பதுடன் சான்றிதழ் மற்றும் உரித்துடைய விலைப்பட்டியல்கள் சமர்ப்பித்த பின்னர் கட்டணங்கள் மீள் நிரப்பல் செய்யப்படும்.
- நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதியில் தேவையான வழிகாட்டல்கள் செய்யப்படும்.

**தகைமை.**

- ஆகக் குறைந்தது 01 வருட உற்பத்தி அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பத்தில் கைத்தொழிலை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தல் வேண்டும்.
- விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போது உரித்துடைய சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்காக உறுதிப்படுத்தப்படும் நிறுவனத்திற்கு விண்ணப்பிக்காத கைத்தொழிலொன்றாக இருத்தல் வேண்டும்.

**தெரிவு செய்யும் செயன்முறைகள்.**

பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மீது மற்றும் நேர்முகப் பரீட்சையில் நிச்சயிக்கப்படும் விடயங்கள் மீது மேலே துறைகளுக்கு உரித்துடைய 50 உற்பத்திக் கைத்தொழில்கள் தெரிவு செய்யப்படும்.

**ஏனைய நிபந்தனைகள்.**

- இலங்கை தர நிறுவனத்தின் (SLS) சான்றிதழ்கள் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
- சான்றிதழ்கள் மற்றும் விலைப் பட்டியல்கள் 2019 நவம்பர் 30 ஆம் திகதிக்கு அல்லது அத்திகதிக்கு முன்னர் அமைச்சுக்கு சமர்ப்பித்து உரித்துடைய சான்றிதழ்க் கட்டணம் மீள் நிரப்பல் செய்து கொள்ளல் வேண்டும்.
- உரித்துடைய கைத்தொழில் உறுதிப்படுத்தும் செயன்முறைகள் செய்யப்படும் காலப்பகுதியில் ஏனைய அரசாங்க நிறுவனமொன்றில் இருந்து இதற்குச் சமமான பயன்கள் பெற்றுக் கொள்ளக் கூடாது.
- தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் உரிய திகதிக்கு முன்னர் தமது நிறுவனத்தின் உறுதிப்படுத்தும் செயன்முறைகள் முடிவுறுத்தப்படும் என்பதற்கு அமைச்சுடன் இணக்க உடன்படிக்கையொன்று செய்து கொள்ளல் வேண்டும்.

**விண்ணப்பப் படிவம்.**

உங்களால் தயாரிக்கப்பட்ட கீழ்க்காணும் தகவல்கள் அடங்கிய விண்ணப்பப் படிவம் கீழே காண்பிக்கப்பட்டுள்ள முகவரிக்கு 2019 பெப்ரவரி 26 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

- நிறுவனத்தின் பெயர், முகவரி மற்றும் தொலை பேசி இலக்கங்கள்
- உற்பத்தியின் தன்மை
- வருடாந்த உற்பத்தி கொள்ளளவு
- வருடாந்த புரள்வு
- ஊழியர்கள் எண்ணிக்கை

**முகவரி.**

பணிப்பாளர், அபிவிருத்திப் பிரிவு, கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றல், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு. 73/1, காலி வீதி, கொழும்பு 03.

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கங்கள் 0112422319, 011 2432750 அழைப்பதன் மூலம் அல்லது www.industry.gov.lk ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும். (மின்னஞ்சல் முகவரி: sector 1 mid @yahoo. com)

**செயலாளர்,**
**கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்ட காலமாக இடம் பெயர்ந்த**
**மக்களை மீள் குடியேற்றல், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு.**
**73/1, காலி வீதி, கொழும்பு 03.**